**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600006.**
**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச் – 2024**

விடைக்குறிப்புகள் –வரலாறு

குறிப்பு:

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி – 1ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்த குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**மொத்த மதிப்பெண்கள் : 90**

பகுதி–**I**

அனைத்து **வினாக்க**ளுக்கும் விடையளி.
சரியான விடை**யைத்** தேர்ந்தெடு**த்து எழு**துக. 20×1=20

| வினா எண் | குறியீடு | விடை | வினா எண் | குறியீடு | விடை |
|---|---|---|---|---|---|
| 1. | அ | பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தர் | 1. | அ | iii, iv, i, ii |
| 2. | அ | iii, iv, i, ii | 2. | ஈ | 1952 |
| 3. | ஆ | கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது | 3. | அ | சையது அமீர் அலி |
| 4. | இ | W.C. பானர்ஜி | 4. | ஈ | 1–(iv), 2-(iii), 3–(i),4-(ii) |
| 5. | ஈ | 1952 | 5. | இ | W.C. பானர்ஜி |
| 6. | ஆ | 2015 | 6. | ஆ | மெக் ஆர்தர் |
| 7. | அ | சையது அமீர் அலி | 7. | ஆ | எல்பா |
| 8. | அ | மத்திய தரைக்கடல் | 8. | ஆ | கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது |
| 9. | ஈ | 1-(iv), 2–(iii), 3-(i), 4-(ii) | 9. | ஆ | i மற்றும் ii |
| 10. | அ | ஆந்திரா | 10. | இ | டெ கௌள்னே |
| 11. | ஆ | உஷா மேத்தா | 11. | அ | பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தர் |
| 12. | ஆ | இராஜாஜி | 12. | அ | பம்பாய் – தானே |
| 13. | ஆ | (i) மற்றும் (ii) | 13. | அ | ஆந்திரா |
| 14. | ஆ | எல்பா | 14. | ஈ | வேலண்டைன் சிரோல் |
| 15. | ஆ | மெக் ஆர்தர் | 15. | ஆ | 5 |
| 16. | ஈ | வேலண்டைன் சிரோல் | 16. | ஈ | அன்னிபெசன்ட் |
| 17. | இ | டெ கௌள்னே | 17. | ஆ | உஷா மேத்தா |
| 18. | அ | பம்பாய் – தானே | 18. | அ | மத்திய தரைக் கடல் |
| 19. | ஈ | அன்னி பெசன்ட் | 19. | ஆ | இராஜாஜி |
| 20. | ஆ | 5 | 20. | ஆ | 2015 |

பகுதி –II

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7x2=14

| வ. எண் | விடை | மதிப்பெண் கள் |
|---|---|---|
| 21 | அவுரி ( இண்டிகோ ) கலகம்<br>❖ அவுரி சாகுபடிக்கு பண்ணையாளர்கள் சந்தை விலையைவிடக் குறைவாகவே கொடுத்தனர்.<br>❖ இதனை எதிர்த்து விவசாயிகள் கலகத்தில் ஈடுபட்டனர் (1859 – 60).<br>❖ இக்கலகத்தின் மூலம் பண்ணையாளர்கள் வடக்கு வங்காளத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். (எவையேனும் இரண்டு குறிப்புகள்) | 2 |
| 22 | தேசியம்<br>❖ தேசியம் என்றால் ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல்.<br>❖ தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.<br>❖ தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல். (எவையேனும் இரண்டு குறிப்புகள்) | 2 |
| 23 | தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் எதிர்க்கப்படல்<br>❖ மத்திய சட்டப் பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் இம்மசோதாவை எதிர்த்த நிலையில் இச்சட்டத்தை அரசு நிறைவேற்றியது.<br>❖ விசாரணையின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு இச்சட்டம் அதிகாரமளித்தது.<br>❖ எனவே காந்தியடிகள் நிறுவிய 'சத்தியாகிரக சபை', இந்தச்சட்டத்தை மீற உறுதி ஏற்றது. (எவையேனும் இரண்டு குறிப்புகள்) | 2 |
| 24 | தனித்தொகுதி முறை<br>❖ தனித்தொகுதி முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.<br>❖ 1909ஆம் ஆண்டின் மின்டோ–மார்லி சட்டம் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதியை வழங்கியது. | 2 |
| 25 | இரவலர் சட்டங்கள்.<br>❖ பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக்காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டது.<br>❖ வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழை சிறார்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.<br>❖ ஆற்றலிருந்தும் வேலை வாய்ப்பில்லாமல் தவித்தோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது. (எவையேனும் இரண்டு குறிப்புகள்) | 2 |
| 26 | லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம்.<br>❖ லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் இஸ்லாமியர்களுக்கான தனிநாடு கோரிக்கையாகும்.<br>❖ இக்கோரிக்கையை முஸ்லிம் லீக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் முன் வைத்தனர்.<br>❖ இத்தீர்மானம் காங்கிரசோடு பேச்சுவார்த்தையை நிராகரிக்க பிரிட்டிஷாருக்கு ஒரு தெம்பை கொடுத்தது.<br>(எவையேனும் இரண்டு குறிப்புகள்) | 2 |

| | | |
|---|---|---|
| 27 | நட்சத்திர சேம்பர்<br>❖ தனது ஆட்சிக்கு பிரபுக்களால் ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்க ஏழாம் ஹென்றி முடிவு செய்தார்.<br>❖ கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை அரச சபையின் விசாரணைக்கு உட்படுத்த இதனை ஏற்படுத்தினார்.<br>❖ நீதிமன்ற அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது. | 2 |
| 28 | **பாஸ்டன் தேநீர் விருந்து (1773)**<br>❖ பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்.<br>❖ அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் இருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.<br>❖ அக்கப்பல்களிலிருந்த 342 தேயிலை பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர். | 2 |
| 29 | பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்கள்.<br>❖ பாலகங்காதர திலகர்<br>❖ பிபின்சந்திர பால்<br>❖ லாலாலஜபதி ராய். | 2 |
| 30 | **நீண்டப் பயணம் (1934)**<br>❖ 1934இல் பொதுவுடைமை இராணுவம் மேற்கொண்டதே 'நீண்டபயணம்' என்றழைக்கப்படுகிறது.<br>❖ நீண்ட பயணத்தின் விளைவாக மாவோ சீனாவில் மக்களின் ஆட்சியாளர் ஆனார்.<br>❖ தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குழுக்களை அமைத்து பொதுவுடைமைவாதிகள் சீனாவில் ஆட்சியமைக்க அடித்தளம் அமைத்தார். **(எவையேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |

## பகுதி –III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.**

வினா எண் 40 க்கு கட்டாயம் **விடையளிக்கவும்.** 7x3=21

| வ. எண் | விடை | மதிப்பெண் கள் |
|---|---|---|
| 31 | **டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO)**<br>❖ பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் 1907ல் தோரப்ஜி டாடா என்பவரால் அமைக்கப்பட்டது.<br>❖ சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.<br>❖ இதன் உற்பத்தி 1912–13 இல் 31,000 டன்னாக இருந்தது<br>❖ 1917–18 இல் இதன் உற்பத்தி 1,81,000 டன்னாக அதிகரித்து.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 32 | பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகள்.<br>❖ நாடுகள் ஒன்றுக்கொன்று அவற்றின் இறையாண்மையை மதித்து நடத்தல்.<br>❖ நாடுகள் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.<br>❖ ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.<br>❖ நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் கூட்டுறவு.<br>❖ சமாதான சகவாழ்வு.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

| | | |
|---|---|---|
| 33 | **குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள்.**<br>❖ குத்தகையை முறைப்படுத்துவது.<br>❖ குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.<br>❖ நிலவுடைமையாளர்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்தல்.<br>❖ நிலத்திற்கான உரிமையை குத்தகைதாரர்களுக்கு அளித்தல்.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 34 | **மிக ஆபத்தான U–படகுகள் மற்றும் Q–கப்பல்கள்.**<br>**U–படகுகள் :**<br>❖ முதல் உலகப்போரில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் U–படகுகள் எனும் நீர்மூழ்கி கப்பல்கள் ஆகும்.<br>❖ பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள்.<br>**Q–கப்பல்கள் :**<br>❖ Q–கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும்.<br>❖ பிரிட்டன் இக்கப்பல்களின் மூலம் ஜெர்மனியின் தாக்குதலைத் தூண்டச்செய்து பின்னர் பதிலடி கொடுத்தது. | 3 |
| 35 | **நேட்டோவைப் போல சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை**<br>❖ சீட்டோ (SEATO) ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதியாக அமைந்ததாகும்.<br>❖ பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய இரண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகள் மட்டுமே இதில் உறுப்பினராக சேர்ந்தன.<br>❖ சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது.<br>❖ உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட நாடுகளே அவற்றை எதிர்கொள்ள வேண்டும்.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 36 | **வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள்.**<br>❖ ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றார்.<br>❖ அதன்படி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.<br>❖ S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.<br>❖ சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பண்டையகால கடற்பயணப் பெருமைகளை துணையாகக் கொண்டார்.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 37 | **பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்**<br>❖ பூனா ஒப்பந்தம் காந்தியடிகளுக்கும், அம்பேத்கருக்கும் இடையே ஏற்பட்டது.<br>❖ வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.<br>❖ தனித் தொகுதிகளைப் பறித்துக் கொண்டது.<br>❖ இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதமளிக்கப்பட்டது.<br>❖ இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

| | | |
|---|---|---|
| 38 | **அமெரிக்கபுரட்சியின் முக்கியத்துவம்.**<br>❖ மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவாகப் பரவலாயின.<br>❖ அரசியல், சமூக மாற்றங்கள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டிருந்தன.<br>❖ கல்வியின் முக்கியத்துவம் சிறப்பிடத்தைப் பெற்றது.<br>❖ கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.<br>❖ அமெரிக்கபுரட்சி காலனி ஆதிக்கத்திற்கு ஒரு பின்னடைவாகும்.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 39 | **1492 இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம்.**<br>❖ 1492 இல் கொலம்பஸ் பாலோஸ் துறைமுகத்திலிருந்து 3 சிறிய கப்பல்கள் மூலமாகப் பயணம் மேற்கொண்டார்.<br>❖ இரண்டு மாத பயணத்துக்குப் பிறகு இந்தியா என்று அவர் நம்பிய நிலப்பகுதியை வந்தடைந்தார்.<br>❖ ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும்.<br>❖ தான் கண்டுபிடித்த நிலப்பகுதி இந்தியா என்று அவர் நம்பியதால் அம்மக்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 40 | **வங்கப் பிரிவினை.**<br>❖ 1905 ஆம் ஆண்டு வங்காளம் இரண்டாக பிரிக்கப்பட்டது.<br>❖ வங்காளத்தை இரண்டாகப் பிரித்தவர் கர்சன் பிரபு ஆவார்.<br>❖ இந்து, முஸ்லீம்களை பிரிப்பது கர்சனின் நோக்கமாக இருந்தது.<br>❖ வங்கப் பிரிவினையை எதிர்த்து சுதேசி இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.<br>❖ வங்கப் பிரிவினை மக்களை ஆங்கில அரசுக்கெதிராக ஒன்றுபடுத்தியது.<br>**(எவையேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

## பகுதி –IV


**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7x5=35**


| வ. எண் | விடை | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 41 (அ) | இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர் அது இந்தியச் சமூகத்தைச் சீர்த்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கு.<br>❖ இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கம்<br>❖ இந்திய சமூகத்தில் ஏற்படுத்திய சீர்த்திருத்தம்<br>❖ இந்திய சமூகத்தில் மீட்டுருவாக்கம்<br>**(விரிவான விளக்கத்துடன்)** | 5 |
| (அல்லது) | | |

| | | |
|---|---|---|
| (ஆ) | **இராஜாஜி திட்டம் .**<br>❖ 1944 ஏப்ரல் மாதத்தில் இராஜாஜி ஒரு முன்மொழிவு தீர்மானத்தை வழங்கினார்.<br>❖ இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தல்.<br>❖ அம்மாவட்டங்களில் வயதுத் தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.<br>❖ ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதிசெய்யப்பட்டால் பொதுவான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.<br>❖ அவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவை இடம்பெற வேண்டும்.<br>❖ எல்லையில் அமையப் பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.<br>❖ முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் இத்திட்டங்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.<br>❖ 'இராஜாஜி திட்டத்தை' அடிப்படையாகக் கொண்டு காந்தியடிகள் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.<br>❖ ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்தமுடிவும் எட்டப்படவில்லை.<br>(எவையேனும் ஐந்து குறிப்புகள்) | 5 |
| 42 (அ) | டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கம்.<br>❖ பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா(1923)<br>❖ மஹத் சத்தியாகிரகம்<br>❖ பூனா ஒப்பந்தம் (1932)<br>❖ வகுப்பு வாரி தொகுதி<br>**(விரிவான விளக்கத்துடன்)** | 5 |
| (அல்லது) | | |
| ஆ | இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படைகலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் :<br>❖ HMIS தல்வார் என்ற போர்க்கப்பலில் மாலுமியாக பணியாற்றிய B.C தத் என்பவர் அக்கப்பலின் பக்கவாட்டில் வெள்ளையனே வெளியேறு என்று எழுதியதற்காக கைது செய்யப்பட்டார்.<br>❖ இதனையடுத்து அக்கப்பலின் 1100 மாலுமிகள் உடனடியாக போராட்டத்தில் இறங்கினர்.<br>❖ ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும், தரக்குறைவான செயல்பாடுகளையும் கண்டித்தனர்.<br>❖ மாலுமிகள் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு நகரங்களிலிருந்த ராயல் விமானப்படை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.<br>❖ இக்கலகத்தை பிரிட்டிஷ் அரசு அடக்குமுறையை வெளிப்படுத்தியே எதிர்கொண்டது.<br>❖ பம்பாய் நகரில் இருந்த சர்தார் வல்லபாய் படேல் இக்கலகத்தை முடிவிற்கு கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டார்.<br>(எவையேனும் ஐந்து குறிப்புகள்) | 5 |

<table>
<tr><td>43<br>(அ)</td><td>இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேருவின் பங்கு.<br>இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்:<br>❖ காலனிய எதிர்ப்பு.<br>❖ இனவெறியை எதிர்த்தல்.<br>❖ வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை.<br>❖ ஆப்பிரிக்க– ஆசிய ஒற்றுமை.<br>❖ பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்.<br>❖ உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.<br>அணிசேரா இயக்கத்தில் ஆப்ரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேருவின் பங்கு:<br>❖ ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் புதிய நாடுகளை பனிப்போருக்குள் தள்ளும் முயற்சிகளை எதிர்த்தார்.<br>❖ 1955 இல் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாட்டை கூட்டினார்.<br>❖ அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவை குறித்து நேரு விளக்கினார்.</td><td>5</td></tr>
<tr><td colspan="3">(அல்லது)</td></tr>
<tr><td>(ஆ)</td><td>ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகள்.<br>ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (1980 – 1999) :<br>❖ கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.<br>❖ இதன்படி மக்கள் வறுமையிலிருந்து வெளியே வர பசுக்கள் அல்லது ஆடுகள் வழங்கப்பட்டன.<br>❖ சிறிய கடைகள் வைக்கவோ, வியாபாரங்கள் செய்யவோ உதவிகள் வழங்கப்பட்டன.<br>❖ இத்திட்டத்தில் உதவியைப் பெறும் குடும்பத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு மானியங்களும் மாறுபட்டன.<br>மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச்சட்டம் (2005):<br>❖ ஒவ்வொரு ஆண்டும் 100 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வழங்கப்பட்டது.<br>❖ ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களுக்கு வேளாண் பணிகள் இல்லாத காலங்களில் பிற வேலைகள் வழங்கப்பட்டன.<br>❖ இதன்படி கிராமப்புறங்களில் சாலைகள், கால்வாய்கள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், அமைத்தல் போன்ற பணிகள் வழங்கப்பட்டன.<br>❖ வேலை செய்வோரில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாக இருத்தல் வேண்டும்.<br>❖ ஆண்கள் பெண்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்படவேண்டும்.</td><td>5</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **44 (அ)** | **அமெரிக்கவிடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள்.**<br>**காரணங்கள் :**<br>❖ நாவாய் சட்டங்கள்<br>❖ சர்க்கரை வரி<br>❖ முத்திரைச் சட்டம்<br>❖ பாஸ்டன் படுகொலை<br>❖ பாஸ்டன் தேநீர் விருந்து<br>❖ டவுன்ஷெண்ட் சட்டம்<br>❖ பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள்<br>போக்கு :<br>❖ 1776 ஜுலை 4ல் 13 குடியேற்றங்கள் விடுதலையை அறிவித்தனர்.<br>❖ அமெரிக்கப் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.<br>❖ சரடோகா போர்<br>❖ யார்க்டவுன்<br>விளைவுகள் :<br>❖ இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.<br>❖ அமெரிக்காவின் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரித்தது.<br>❖ ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார். | 5 |
| | **(அல்லது)** | |
| **(ஆ)** | பொருளாதாரப் பெருமந்தத்தின் பொது தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சி.<br>❖ சென்னை மாகாணத்தில் தொழில்துறை வளர்ச்சி கனிசமானதாக இருந்தது.<br>❖ பெருமந்தத்தால் ஏற்பட்ட நிலத்தின் விலை விழ்ச்சி, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைத்தனர்.<br>❖ குறைந்த வட்டி வீதத்தில் கடன் போன்றவை கோயம்புத்தூரில் ஜவுளித்துறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தன.<br>❖ கோயம்புத்தூரில் 29 ஜவுளி ஆலைகள் மற்றும் விதை நீக்கும் தொழிற்சாலைகள் தோன்றின.<br>❖ கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரையில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.<br>❖ சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 2 லிருந்து 11 ஆக உயர்ந்தது.<br>❖ அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள் மற்றும் சினிமா நிறுவனங்கள் எண்ணிக்கை பெருகியது.<br>(எவையேனும் ஐந்து குறிப்புகள்) | 5 |
| **45 (அ)** | **உலகளாவிய பிரச்சினைகளை தீர்ப்பதில் ஐ. நா. சபையின் பங்கு.**<br>❖ பாலஸ்தீன பிரச்சனை<br>❖ தேசிய சீனாவை அங்கீகரித்தல்<br>❖ கொரிய சிக்கல் (1950 – 53)<br>❖ சூயஸ் கால்வாய் சிக்கல் (1956)<br>❖ ஹங்கேரி சிக்கல் (1956)<br>❖ அரபு இஸ்ரேல் போர்<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள் விரிவான விளக்கத்துடன்)** | 5 |
| | (அல்லது) | |

| | | |
|---|---|---|
| (ஆ) | ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்<br>❖ பிஸ்மார்க்கின் கொள்கை – இரத்தமும் இரும்பும்.<br>❖ ஷ்லெஸ்விக் – ஹால்ஸ்டின் சிக்கல்<br>❖ ஆஸ்திரியப் – பிரஷ்யப் போர் (1866)<br>❖ பிராங்கோ– பிரஷ்யப் போர் (1870–71)<br>❖ ஜெர்மானிய ஒருங்கிணைப்பு<br>(விரிவான விளக்கத்துடன்) | 5 |
| 46<br>(அ) | முதல் உலகப்போரின் காரணங்கள் மற்றும் விளைவுகள்<br>காரணங்கள் :<br>❖ கூட்டணி முறையின் பரிணாமம்<br>❖ மொராக்கோ சிக்கல்<br>❖ போஸ்னிய சிக்கல்<br>❖ பால்கன் சிக்கல்<br>❖ உடனடிக் காரணம் –ஆர்ச்டியூக் ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட் படுகொலை<br>**விளைவுகள் :**<br>❖ பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது. (1919)<br>❖ ஜெர்மன் அரசு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.<br>❖ உலக அமைதியை பாதுகாக்க பன்னாட்டு சங்கம் நிறுவப்பட்டது .<br>(விரிவான விளக்கத்துடன்) | 5 |
| | (அல்லது) | |
| (ஆ) | இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்கள்<br>**(i)**கல்கத்தா **(ii)**நாக்பூர் **(iii)** டெல்லி **(iv)**தூத்துக்குடி **(v)** காஷ்மீர்<br><br> | 5 |

<table>
<tr><td>47<br>(அ)</td><td>இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமானவர்கள்.<br>❖ சார் பள்ளத்தாக்கு மற்றும் ரைன்லாந்து இணைப்பு<br>❖ ஆஸ்திரியா இணைப்பு<br>❖ சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு<br>❖ மூனிச் ஒப்பந்தம்<br>❖ செக்கோஸ்லோவாக்கியா மீதான தாக்குதல்<br>❖ நாஜி – சோவியத் ஒப்பந்தம்<br>❖ போலந்து மீதான தாக்குதல்<br>(எவையேனும் ஐந்து குறிப்புகள் விரிவான விளக்கத்துடன்)</td><td>5</td></tr>
<tr><td colspan="3">(அல்லது)</td></tr>
<tr><td>(ஆ)</td><td>1900 முதல் 1930 வரை இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகள் (காலக்கோடு)<br>
</td><td>5</td></tr>
</table>